ஹட்டன் நெஷனல் காப்புறுதி நிறுவனம்	100,680.00	97,860.00	96,820.00	100,945.00	66,325.00	76,300.00	95,415.00	140,055.00	-	178,630.00	208,040.00	217,545.00	1,378,615.00
வரையறுக்கப்பட்டஅமானா தக்கா.்.புல்	204,694.91	123,489.10	117,269.61	132,068.47	90,539.99	67,435.89	-	291,638.69	138,787.92	266,730.96	-	616,464.45	2,049,119.99
செலிங்கோ காப்புறதிக் கம்பனி	339,345.84	405,268.00	375,551.00	369,658.33	242,277.80	252,830.19	311,662.06	561,670.68	339,693.00	299,575.15	1,010,562.00	805,202.66	5,313,296.71
MBSL காப்புறுதிக் கம்பனி	-	138,882.99	-	-	58,452.40	-	-	-	124,880.02	216,772.74	-	90,377.00	629,365.15
கூட்டுறவு காப்புறுதி நிறுவனம்	133,311.00	339,409.00	329,770.00	288,170.00	197,888.00	184,681.00	292,478.00	544,738.00	313,020.00	240,626.00	1,089,187.00	897,357.00	4,850,635.00
ஓரியண்ட் காப்புறுதி நிறுவனம்	-	457,120.00	130,510.00	117,320.00	92,575.00	-	183,580.00	136,140.00	-	215,310.00	183,141.48	176,616.72	1,692,313.20
சனச காப்புறுதி நிறுவனம்	107,660.70	109,441.44	109,926.57	102,226.24	70,528.21	56,560.27	96,994.81	157,626.86	87,803.98	70,093.75	300,936.16	254,518.02	1,524,317.01
அலையன்ஸ் லங்கா கம்பனீ	699,125.00	244,960.00	229,220.00	215,680.00	144,655.00	154,165.00	-	509,475.00	213,800.00	185,580.00	535,460.00	458,100.00	3,590,220.00
இலங்கை காப்புறுதி நிறுவனம்	839,487.00	855,791.00	835,063.00	761,048.00	527,499.00	524,993.00	745,256.00	1,192,085.00	667,010.00	588,740.00	2,246,962.00	1,783,693.00	11,567,627.00
பீப்பிள்ஸ் இன்சுவூரன்ஸ் காப்புறுதிக் கம்பனி	162,466.32	218,651.56	183,248.68	188,602.17	108,074.78	112,459.34	150,475.37	179,103.62	167,618.88	194,181.29	387,583.06	300,820.53	2,353,285.60
கொண்டினெண்டல் இன்சூவரன்ஸ் லங்கா நிறுவனம்	95,615.00	90,930.00	93,276.00	68,791.00	73,383.00	66,273.00	90,489.00	111,743.00	89,973.00	83,416.00	144,963.00	135,022.00	1,143,874.00
லங்கா ஒரிக்ஸ் லீசிங் காப்புறுதிக் கம்பனி	110,175.00	520,295.00	-	243,050.00	-	582,825.00	323,085.00	-	-	1,292,181.00	494,268.00	423,830.00	3,989,709.00
தேசிய காப்புறதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்	58,559.55	23,108.95	25,981.70	-	39,168.30	121,901.80	-	9,546.35	-	-	48,910.10	22,320.05	349,496.80
பெயர் பர்ஸ்ட் காப்புறுதி நிறுவனம்	1,031,025.00	1,024,115.00	1,006,705.00	400,786.00	272,083.00	349,293.00	384,657.00	613,136.00	434,928.00	748,247.00	941,482.00	926,120.00	8,132,577.00
													-
மொத்தம்	**3,882,145.32**	**4,649,322.04**	**3,533,341.56**	**2,988,345.21**	**1,983,449.48**	**2,549,717.49**	**2,674,092.24**	**4,446,958.20**	**2,577,514.80**	**4,580,083.89**	**7,591,494.80**	**7,107,986.43**	**48,564,451.46**

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை
2021 திசெம்பர் 31 முடிவடைந்த
வருடத்துக்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்

04. ஏனைய வருமானங்கள்

	குறிப்பு	2021	2020 (மீண்டும் எடுத்துரைக்கப்பட்ட)
		ரூ	ரூ
திறைசேரி உண்டியல் வட்ட	**7**	13,708,048.67	16,200,634.75
நிலையான வைப்பு வட்டி	**8**	8,868,989.82	11,167,626.60
		22,577,038.49	27,368,261.35

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை
2021 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்

05.செலவினங்கள்

5.1 நிர்வாகச் செலவினங்கள்

	2021	2020 (Restated)
	ரூ.	ரூ.
சம்பளங்களும் வேதனாதிகளும்	899,700.00	809,925.00
எரிபொருள் கொடுப்பனவு	308,730.00	251,510.08
ஏனைய கொடுப்பனவுகள்	982,080.51	863,300.80
எரிபொருள்கள் மற்றும் மசகெண்ணெய்	403,647.57	87,500.00
சபையின் உறுப்பினர்களது கட்டணம	443,000.00	201,500.00
சபையின்உசாக்கையர்களுக்கான கட்டணங்கள்	791,052.25	298,986.92
வாகனப் பராமரிப்பு	14,732.05	13,717.01
எழுதுகருவிப் பொருட்களின் செலவினம்	169,268.15	159,280.00
தொலைபேசி கட்டணங்கள்	151,695.04	183,335.23
பத்திரிக்கை	68,240.00	73,080.00
அச்சீடு மற்றும் மொழிபெயர்ப்பு	746,892.50	56,437.50
மேலதிக வேலைநேர அறவிடல்கள்	365,197.65	134,350.22
கூட்டங்களுக்கான உபசரணை	51,793.00	78,607.67
கணக்காய்வு கட்டணங்கள		
இந்த ஆண்டுக்கான கணக்காய்வு கட்டணம்	200,000.00	170,000.00
முந்தைய ஆண்டின் பற்றாக்குறை(அதிகப்படியான) ஒதுக்கீடு	22,600.00	(207,000.00)
பயண செலவுகள்	294,872.00	31,535.00
தேய்மானம்	1,231,331.82	1,230,021.59
தபால் கட்டணம்	17,715.00	3,720.00
பணியாளர் பயிற்சி	16,000.00	-
பயிலுனர் கொடுப்பனவுகள்	7,500.00	-
சுத்திகரிப்பு கட்டணம்	734,400.00	590,780.51
நானாவித செலவினங்கள்	144,440.00	62,587.10
	8,064,887.54	**5,093,174.62**

5.2 வீதி பாதுகாப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செலவினம்

	குறிப்புகள்	2021	2020
		ரூ.	ரூ.
வீதி பாதுகாப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்		33,858,821.35	-
மோதிவிட்டு தப்பியோடியதன் காரணமாக வழங்கிய இழப்பீடு		6,375,000.00	4,275,000.00
		40,233,821.35	**4,275,000.00**

5.2.1 வீதி பாதுகாப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்துக்கான இழப்பீடு

	2021
நிகழ்ச்சித்திட்டம்	ரூ
வீதி பாதுகாப்பு முகாமைத்துவத்தின் திறன் மேம்பாடு	107,127.00
பாதுகாப்பான வீதி முறைமையொன்றினை உருவாக்குதல்	7,781,651.00
வீதியைப் பயன்படுத்துபவர்களின் ஒழுக்காறு கட்டியமைத்தல்	25,970,043.35
	33,858,821.35

2021 திசெம்பர் 31 ஆந் திகதியிற்கு நிதிசார் குறிப்புப் பதிவுகள்

06.சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபரணங்கள

	கணனிகள்	நிழற்பட பிரதி /அச்சீட்டு இயந்திரங்கள்	வீட்டு தளபாடங்கள் மற்றும் கருவிகள்	குளிரூட்டிகள	ஊடக உபகரணம்	ஏனைய சொத்துக்கள்	சாரதி கற்றல் இயந்திரம்	குளிர்சாதனப்பெட்டிக்ள	மொத்தம்
செலவு / மீள மதிப்பீடு	**ரூ**	**ரூ**	**ரூ**	**ரூ**	**ரூ**	**ரூ**	**ரூ**	**ரூ**	**ரூ**
2021.01.01ஆந் திகதியிற்கு நிலுவை (மீண்டும் எடுத்துரைத்தல்)	713,500.00	140,700.00	641,500.00	139,800.00	1,554,862.50	62,207.50	5,875,351.00	133,000.00	9,260,921.00
வருடத்துக்குள்									-
சேர்த்தல்கள்	-	-	-	-	22,550.00	17,774.00	-	-	40,324.00
அப்புறப்படுத்தல்	-	-	-	-	-	-	-	-	-
2021.12.31திகதியிற்கு நிலுவை	**713,500.00**	**140,700.00**	**641,500.00**	**139,800.00**	**1,577,412.50**	**79,981.50**	**5,875,351.00**	**133,000.00**	**9,301,245.00**
திரண்ட தேய்மானம்									
2021.01.01 திகதியிற்கு நிலுவை (மீண்டும் எடுத்துரைத்தல்)	507,161.25	50,564.06	295,090.00	50,240.63	579,407.02	30,771.48	1,207,263.90	42,906.16	2,763,404.50
வருடத்துக்கான அறவீடுகள்	178,375.00	17,587.50	64,150.00	17,475.00	326,356.82	6,602.40	587,535.10	33,250.00	1,231,331.82
2021.12.31திகதியிற்கு நிலுவை	**685,536.25**	**68,151.56**	**359,240.00**	**67,715.63**	**905,763.84**	**37,373.88**	**1,794,799.76**	**76,156.16**	**3,994,736.32**
தேறிய புத்தகப் பெறுமதி									
2021.12.3திகதியிற்கு	206,338.75	90,135.94	346,410.00	89,559.37	975,455.48	31,436.02	4,668,087.10	90,093.84	6,497,516.50
2021.12.31 திகதியிற்கு	**27,963.75**	**72,548.44**	**282,260.00**	**72,084.37**	**671,648.66**	**42,607.62**	**4,080,552.00**	**56,843.84**	**5,306,508.68**

6. 1 முழுமையாக தேய்வடைந்த பயன்பாட்டில் உள்ள சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள்

சாதாரண இயக்க நடவடிக்கைகளில் பயன்பாட்டில் உள்ள முழுமையாக தேய்மானம் செய்யக்கூடிய சொத்துக்கள் PPE இல் சேர்க்கப்பட்டுள்ளன. அறிக்கையிடல் தேதியில் இன்னும் பயன்பாட்டில் உள்ள முழு மதிப்பிறக்கம் செய்யப்பட்ட சொத்துகளின் கிரயம்.'. மறுமதிப்பீட்டிற்கமைய மதிப்பு பின்வருமாறு.

	2021 **ரூ**	**2020** **ரூ**
ஏனைய சொத்துக்கள்	41,914.69	41,914.69

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை
2021 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்றுக்கள்

07. திறைசேரி உண்டியல்கள்

விலைப்பட்டியல் இல.	2021 திசெம்பர் 31 அம் திகதியிற்கு முதலீடு செய்த தொகை	2021 வருடத்துக்கான வட்டி வருமானம்	2021 திசெம்பர் 31 ஆம் திகதியிற்கு கி.தே.வ.வட்டி
1	12,797,283.29	625,600.32	49,466.24
2	43,898,668.03	2,207,491.97	
3	7,662,586.15	374,587.97	29,618.73
4	11,275,586.62	551,211.98	43,584.32
5	19,987,147.88	937,764.29	86,483.90
6	819,961.09	38,469.98	3,547.95
7	30,529,240.10	1,551,374.55	412,151.18
8	13,725,015.14	635,401.71	250,742.90
9	9,964,776.60	487,132.17	38,517.55
10	101,081,518.19	4,742,582.83	437,377.25
11	30,501,085.88	1,549,945.13	411,771.09
12	87,146.95	4,088.46	377.08
13	51,106.48	2,397.33	221.14
மொத்தம்	**282,381,122.40**	**13,708,048.68**	**1,763,859.33**

08. நிலையான வைப்புக்கள்

நிலையான வைப்புக்களின் இல.	கணக்கு இல.	தொகை	2021 வருடத்துக்கான வட்டி வருமானம்	2021 திசெம்பர் 31 ஆம் திகதியிற்கு கி.தே.வ.வட்டி
1	5052659	10,000,000.00	457,401.06	40,277.78
2	6462242	3,000,000.00	137,269.40	6,666.67
3	6061516	1,000,000.00	45,817.73	3,194.44
4	83251129	37,783,177.89	1,843,584.70	479,555.72
5	83250939	51,549,239.52	2,726,064.48	683,557.04
6	321362	48,191,452.05	2,666,803.66	2,072,892.60
7	204-60-01-00026713-3	26,000,000.00	992,049.18	992,049.18
		177,523,869.46	**8,868,989.82**	**4,278,193.42**

09.வங்கியிலுள்ள காசு	**2021**	**2020**
	ரூ	**ரூ**
வங்கி நிலுவை	31,111,579.92	55,221,484.39
கண்டறியப்படாத கிடைப்பனவுகள்	-	49,863.42
வங்கியிலுள்ள காசு	31,111,579.92	55,271,347.81

கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கை
2021

தலைவர்

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1 நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

.....

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை பகுதியின் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் 2021 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றவாறு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை

இலக்கம் 1368/18 மற்றும் 2004 நொவெம்பர் 24 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி பிரகாரம் சபைக்கு காப்புறுதி நிறுவனங்களின் மூலம் அனுப்பியிருந்த ரூபா 51,719,745 ஆன நூற்றுக்கு 02 இல் பங்களிப்பில் துல்லியம் தொடர்பாக உறுதிபடுத்தப்படுகின்ற காப்புறுதி நிறுவனங்களில் மூலம் முகவர் சேவைக்கட்டண வருமானம் கணக்கிடும் விபரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 சபையின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையில் திகதிக்குப் பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ள சபையின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பினும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது குறித்து எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என கருதப்படுகின்றன. ஏனைய தகவல்களுக்காக முகாமைத்துவம் பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அபிப்ராயத்தால் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாதிருப்பதுடன் நான் இது குறித்து எந்தவிதமான முறைக்கும் உறுதிப்பாடு அல்லது அபிப்பிராயத்தினை வெளிப்படுத்த மாட்டேன்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கணக்காய்வுடன் தொடர்புடைய வகையில், எனது பொறுப்பாக அமைவது மேற்குறிப்பிட்ட அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்கள் பெற்றுக்கொள்ள முடியுமான பட்சத்தில் வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போதும் ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு விதமாக பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவுக்கமைய பொருள்பட பொருத்தமற்றதா என்பது குறித்து கருதுவதாகும்.

சபையின் 2021 வருடாந்த அறிக்கையினை வாசிக்கும்போது, அந்த அறிக்கையில் போதியளவான பிழைகள் குறிப்பிடப்பட்டிருப்பதை நான் முடிவு செய்யும் பட்சத்தில் , திருத்தம் செய்வதற்காக ஆளுகைத் தரப்பினர்களுக்கு அந்த காரணங்கள் தெரிவிக்கப்பட வேண்டும். மேலும் திருத்தப்படாத பிழைகள் இருப்பின், அவை அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் ஆற்றுதல்படுத்தப்படுகின்ற அறிக்கைக்கு உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வகிப்படுகின்ற தரப்பினரது பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான முறையில் அவசியமாகின்ற உள்ளகக் நிர்வாகத்தினால் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். முகாமைத்துவ சபையினை கலைப்பதற்கு கருதுவதாயின் அல்லது ஏனைய மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் சபையின் தொடர்ந்தியங்குவதுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான கண்காணிக்கும் பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமானதாகும்.

1.5 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரது பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலொன்றாக இருப்பினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும்.

இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, என்னால் கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும்போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின்போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் செயல்படுத்தப்பட்டது. மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லையெனினும், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொளளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

சம்பவங்கள் அல்லது நிலைமையின் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமைப்பாடு பற்றி பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும்.

- எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின்போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு முடிவுகள், முக்கிய உள்ளக ஆளுகை பலவீனங்கள் மற்றும் ஏனைய காரணங்கள் தொடர்பாக ஆளும் தரப்பினரை விழிப்பூட்டுகின்றேன்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்விற்காக தேவையான சகல தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையின் போது வெளிப்படுதப்பட்ட வகையில் உரிய நிதி அறிக்கைகள் சபையினால் பேணப்பட்டிருப்பதாகவும்.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(III) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன எனவும்.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் போது என்னால் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.4 பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் கீழே காட்டப்பட்ட குறிப்பிடுவதற்கு கூட வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் ஆளுகை சபை உறுப்பினர் நிறுவகத்துடன் தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் பொதுவான வியாபார நிலைமை அல்லாமல் தொடர்பட்டுள்ளதாக

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம் அல்லது சபையின்

2.2.1 ஆளுகை சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்கியொழுகாதுள்ள முறையில் செயல்பட்டு இருப்பதாகவும்.

	சட்டங்கள், விதிகள் / பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	**விபரங்கள்**
	----------	----------
(ஆ)	1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு மற்றும் இலக்கம் பிஈடீ/12 பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.4 ஆம் பிரிவு	நிதியாண்டு ஆரம்பமாவதற்கு முன்னர் 03 மாதங்களுக்கு முன்னர் வரவு, செலவுத் திட்டத்தை அங்கீகரிக்க வேண்டியபோதும், சபையினால் வரவு செலவுத்திட்டம் 2021 சனவரி 13 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது.
(ஆ)	2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் (i)4.2.2 பந்தி	காலாண்டு, அரையாண்டு, ஆண்டுரீதியாக நிறுவனம் செயல்திறன் அறிக்கைகளை மீளாய்வு செய்யவேண்டியிருப்பினும் மீளாய்வு ஆண்டிற்குள் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் நடாத்தப்படாதிருந்தது.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் குறிப்பிடப்ட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளைத் தவிர சபையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு முரணாக செயலாற்றியிருப்பது குறித்து

(அ) 1998 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க மோட்டார் வாகன சட்டத்தின் திருத்தச்சட்டத்தின் (203 ஆம் அதிகாரம்) மூலம் வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய ஆணைக்குழு நிறுவுவதனை நோக்கமாகக் கொண்டு தேசிய சபை நிறுவப்பட்டு 15 வருடங்கள் கடந்திருப்பினும் ஆணைக்குழுவாக நிறுவப்படாமைக்கு காரணமாக இந்த சபையின்

பணிகளை நிறைவேற்றுவதற்கு சட்டரீதியான அதிகாரங்கள் கிடைக்காமல் இருந்ததுடன் முறைசார் பதவியணி நியமித்துக்கொள்வதற்கு தடங்களாக இருந்தது.

(ஆ) 1387/4 -2005 ஏப்ரல் 04 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளிலிருந்து மோட்டார் வாகனங்களின் அளவு மற்றும் அவற்றின் சிறப்பியல்ப்புகள் மற்றும் இணைப்பாக்கம், வீதி விபத்துக்கள் மற்றும் வீதிப் பாதுகாப்பு தொடர்பான உள்நாட்டு மற்றும் சர்வதேச புள்ளிவிபரங்கள் உள்ளடங்கிய கணனி தரவுக் களஞ்சிசாலையொன்றினை கொண்டு நடாத்துதல், வீதிப் பாதுகாப்பு விடயம் குறித்து நூலகசாலையொன்றினைக் கொண்டு நடாத்துதல், தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக ஆராய்ச்சிகளுக்கு உதவுதல், இணை சர்வதேச தாபனங்களுடன் உறவுகளை பேணுதல் அறிவு பரிமாற்றிக்கொள்ளல், வீதி பாதுகாப்புடன் தொடர்புடைய கருத்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயல்முறைப்படுத்துதல், அரசாங்க மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளுக்குள் வீதி பாதுகாப்புடன் தொடர்புடைய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் வீதிபாதுகாப்புடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பாக அரசாங்கத்துக்கு மதியுரைகளை வழங்குதல் முதலிய நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு மீளாய்வு வருடமாகும்போதும் செயலாற்றப்பட்டிருக்கவில்லை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் மற்றும் பயனுறுதிவாய்ந்த காலஎல்லைக்குள் உரிய சட்டவிதிகளுக்கு இணங்க கொள்முதல் செய்து பயன்படுத்தாதிருந்தமைக் குறித்து

03. **ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்**

(அ) அரசாங்க கணக்குக் குழுவின் மூலம் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகள் செயல்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டின் ஜூலை மாதம் திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் மற்றும் திருத்தியமைக்கப்பட்ட செயல்முறை ரீதியிலான திட்டமொன்றினைத் தயாரித்து அதிக வேகம் காரணமாக ஏற்படுகின்ற வீதி விபத்துக்களை குறைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை செயல்படுத்தியிருப்பினும் 2021 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்து ரூபா 150 மில்லியன் தொகை உரிய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தாமல் இருந்தால் மொத்த ஒதுக்கீடுகளும் சேமிக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக சபை 2021 ஆம் ஆண்டுக்காக தயாரித்த திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் மற்றும் செயல்முறைத் திட்டம் பயனுறுதி வாய்ந்த ஆளுகைக் காரணியாக பயன்படுத்தாமல் இருந்ததை

அவதானிக்கப்பட்டிருந்தது. அதேபோன்று சபையினால் வீதி பாதுகாப்பு தொடர்பாக புதிய விளைவுபெருக்கமுடைய பயிற்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தி விபத்துகளை குறைப்பதற்கு புதிய முன்மொழிவுகள் சமர்ப்பித்து செயல்படுவதற்குப் பதிலாக முன்னைய வருடங்களில் செயல்படுத்துவதற்கு தவறிய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் 2021 ஆம் ஆண்டில் மீண்டும் செயல்படுத்தப்பட்டிருந்தன

(ஆ) மீளாய்வு வருடத்தில் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து ரூபா 51,719,745 பங்களிப்பு நிதி கிடைத்திருந்ததுடன், அதில் ரூபா 6,375,000 இழப்பீடாக செலுத்தப்பட்டிருந்த அத்தொகை கிடைத்த பங்களிப்புத்தொகையிலிருந்து நூற்று 13 ஆக இருந்தது. இலங்கைக்குள் ஏற்படுகின்ற வாகன விபத்துகள் தொடர்பில் கருதும்போது இழப்பீட்டுத் தொகை பெற்றுக் கொள்வது குறித்து பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு இல்லாமையே இதற்கான பிரதான காரணமாக அமைந்திருப்பதை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டுள்ளது.

(இ) 2017 ஒகஸ்ட் 14 ஆம் திகதிய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் என்பி/5பி/5டீஜி/17 இலக்கம் கொண்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிலைப்பாட்டு அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்தது.

(ஈ) வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை வலுப்படுத்துவதற்காக போதியளவு பயிற்சி பெற்ற பதவியணி மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டியிருப்பினும், சபையின் செயல்பாடுகள் போக்குவரத்து அமைச்சு, இலங்கை புகையிரத திணைக்களம் மற்றும் இலங்கை போக்குவரத்து சபைக்கு இணைக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் அலுவலர் ஒருவர் மற்றும் அமய தொழிலாளர்களைக் கொண்டு இடம்பெறுகின்றது.

(உ) 2018 திசெம்பர் மாதம் ஜப்பான் நன்கொடையாக கிடைத்திருந்த மற்றும் கொள்வனவு செய்திருந்த ரூபா 5,875,351 பெறுமதியான சாரதி பயிற்சி உபகரணங்களிலிருந்து சாரதி பயிற்சியளிப்புகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 2019 ஜூன் 21 ஆந் திகதியின் பின்னர் பயிற்சியளிப்பு நடவடிக்கைகள் நிறுத்திவைத்ததன் காரணமாக அந்த உபகரணங்கள் செயல்படாமல் இருந்தன.

டப்ளியு.பி.சி.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமையதிபதி

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

சட்டங்கள், விதிகள் / பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு

(அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு மற்றும் இலக்கம் PED 12 பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.4 ஆம் பிரிவு

2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட அறிக்கை 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 8 (1) ஆம் பிரிவின் பிரகாரம் 2023 நிதியாண்டு தொடங்குவதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டு வருகின்றது.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய PED /12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.6 பிரிவு

2021 ஆம் அண்டில் நிலவிய கொரோனா தொற்று நிலைமை காரணமாக மற்றும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 10/2022 இற்கமைய பதவியணியினை நிறுவனத்திற்கு அழைக்கப்பட்டதைக் கட்டுப்படுத்தியதன் காரணமாக 2022 ஓகஸ்ட் 24 ஆம் திகதி வரை மீளாய்வுக் கூட்டங்களை முறையாக நடத்த முடியாதிருந்தாலும் இதனகத்துப் பின்னர் 2003 ஜூன் 02, ஆம் திகதி சுற்றறிக்கையின் 4.2.6 பிரிவின் பிரகாரம் நடவடிக்கையெடுக்கப்படும். அதன்படி, 2022 ஆம் ஆண்டுக்கான முதல் முன்னேற்ற ஆய்வுக் கூட்டம் 2022.09.15 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளைத் தவிர, சபையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு முரணாக செயலாற்றியிருப்பது குறித்து

(அ) 1998 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க மோட்டார் வாகன சட்டத்தின் திருத்தச்சட்டத்தின் (203 ஆம் அதிகாரம்) மூலம் வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய ஆணைக்குழு நிறுவுவதனை நோக்கமாகக் கொண்டு தேசிய சபை நிறுவப்பட்டு 15 வருடங்கள் கடந்திருப்பினும் , ஆணைக்குழுவாக நிறுவப்படாமைக்கு காரணமாக இந்த சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு சட்டரீதியான அதிகாரங்கள் கிடைக்காமல் இருந்ததுடன் , முறைசார் பதவியணி நியமித்துக்கொள்வதற்கு தடங்களாக இருந்தது.

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தேசிய போக்குவரத்து பாதுகாப்பு தொடர்பான ஆணைக்குழுவாக நிறுவுவதுடன் தொடர்புடைய வகையில் தயாரிக்கப்பட்ட சட்ட மூலம் சட்ட வரைஞருக்கு சமர்பித்ததன் பின்னர் சட்ட வரைஞரினால் திருத்தங்களுடன் 2022.05.18 ஆம் திகதி போக்குவரத்து அமைச்சிற்கு அனுப்பப்படடு, அவதானிப்புகள் ஆராயப்பட்டிருந்ததுடன் அவதானிப்புகள் இல்லாததால், அடுத்துவரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய, தயாரிக்கப்பட்ட சட்ட மூலத்தின் சட்டரீதியான தன்மை பரிசோதிப்பதற்காக 2022.10.11 ஆம் திகதி போக்குவரத்து அமைச்சின் மூலம் சட்டமா அதிபருக்கு முன்வைக்கப்பட்டிருந்ததுடன், மோட்டார் வாகனச் சட்டத்தின் 213A மற்றும் 213B அகற்றுவதுடன் தொடர்புடைய மோட்டார் வாகனச் சட்டத்தின் நிலவும் ஏற்பாடுகள் தொடர்பாக அவானிப்புகளைப் பெறுவதற்காக மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத்துக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, 2022.10.11 ஆம் திகதி போக்குவரத்து இராஜாங்க அமைச்சரின் மூலம் சட்டமூலத்திற்கு 2 புதிய திருத்தங்கள் சேர்க்குமாறு வழங்கிய மதியுரைக்கமைய போக்குவரத்து அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மீண்டும் சட்ட வரைஞருக்கு முன்வைப்பதற்கு அமைச்சின் சட்டப்பிரிவின் மூலம் நடவடிக்கையெடுத்து வருகின்றது.

(ஆ) இலக்கம் 1387/4 -2005 ஏப்ரல் 04 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளிலிருந்து மோட்டார் வாகனங்களின் அளவு, மற்றும் அவற்றின் சிறப்பியல்ப்புகள் மற்றும் இணைப்பாக்கம், வீதி விபத்துக்கள் மற்றும் வீதிப் பாதுகாப்பு தொடர்பான உள்நாட்டு மற்றும் சர்வதேச புள்ளிவிபரங்கள் உள்ளடங்கிய கணனி தரவுக் களஞ்சிசாலையொன்றினை கொண்டு நடாத்துதல், வீதிப் பாதுகாப்பு விடயம் குறித்து நூலகசாலையொன்றினைக் கொண்டு நடாத்துதல், தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக ஆராய்ச்சிகளுக்கு உதவுதல், இணை சர்வதேச தாபனங்களுடன் உறவுகளை பேணுதல் அறிவு பரிமாற்றிக்கொள்ளல், வீதி பாதுகாப்புடன் தொடர்புடைய கருத்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயல்முறைப்படுத்துதல், அரசாங்க மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளுக்குள் வீதி பாதுகாப்புடன் தொடர்புடைய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் வீதிபாதுகாப்புடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பாக அரசாங்கத்துக்கு மதியுரைகளை வழங்குதல் முதலிய நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு மீளாய்வு வருடமாகும்போதும் செயலாற்றப்பட்டிருக்கவில்லை.

வாகனங்களின் அளவு தொடர்பான தரவுகளைப் பெறுவதற்காக வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் மின்னியல் நூலகத்தினூடாக மோட்டார் வாகனங்களைப் பதிவுத் திணைக்களத்தின் தரவுக் களஞ்சியசாலைக்கு அணுகல் வழங்கப்பட்டுள்ளதுடன், வீதி விபத்துக்கள் தொடர்பான தரவுகளைப் பெறுவதற்கு இலங்கை பொலிஸாரின் தரவுத்தளத்தை அணுகுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோன்று, 2022 ஆம் ஆண்டிற்கான செயல்திறன் திட்டத்தில் தரவு முகாமைத்துவ முறைமைத் தொடர்பாகவுள்ள இலக்குகளை அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் மற்றும் பயனுறுதிவாய்ந்த காலஎல்லைக்குள் உரிய சட்டவிதிகளுக்கு இணங்க கொள்முதல் செய்து பயன்படுத்தாதிருந்தமைக் குறித்து

2023 ஆம் ஆண்டு முதல், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள, அனைத்து பெறுகை நடவடிக்கைகளும் குறிப்பிட்ட சட்டதிட்டங்களுக்கு அமைவாக மற்றும் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் வினைத்திறனுடனும், திறம்படவும் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கையெடுப்பேன்.

03. <u>ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்.</u>

(அ) அரசாங்க கணக்குக் குழுவின் மூலம் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகள் செயல்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டின் ஜூலை மாதம் திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் மற்றும் திருத்தியமைக்கப்பட்ட செயல்முறை ரீதியிலான திட்டமொன்றினைத் தயாரித்து அதிக வேகம் காரணமாக ஏற்படுகின்ற வீதி விபத்துக்களை குறைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை செயல்படுத்தியிருப்பினும் 2021 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்து ரூபா 150 மில்லியன் தொகை உரிய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தாமல் இருந்தால் மொத்த ஒதுக்கீடுகளும் சேமிக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக சபை 2021 ஆம் ஆண்டுக்காக தயாரித்த திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் மற்றும் செயல்முறைத் திட்டம் பயனுறுதி வாய்ந்த ஆளுகைக் காரணியாக பயன்படுத்தாமல் இருந்ததை அவதானிக்கப்பட்டிருந்தது. அதேபோன்று சபையினால் வீதி பாதுகாப்பு தொடர்பாக புதிய விளைவுபெருக்கமுடைய பயிற்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தி விபத்துகளை குறைப்பதற்கு புதிய முன்மொழிவுகள் சமர்ப்பித்து செயல்படுவதற்குப் பதிலாக முன்னைய வருடங்களில் செயல்படுத்துவதற்கு தவறிய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் 2021 ஆம் ஆண்டில் மீண்டும் செயல்படுத்தப்பட்டிருந்தன.

வீதி விபத்துக்களை குறைப்பதற்காக இலங்கை பொலிஸாருக்கு உபகரணங்களை வழங்குதல், அரசாங்க கணகக்குக் குழுவின் கட்டளைகளை நடைமுறைப்படுத்துதல், விலைக்கேள்வி அழைப்பிற்கான அறிக்கைகள் அமைச்சு பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அறிவுறுத்தல்களின்படி தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன.
இவ்வாறு தயாரிக்கப்பட்ட விலைக்கேள்வி அழைத்தல் ஆவணங்களை அமைச்சின் பெறுகைக் குழுவிற்கு முன்வைக்கப்பட்டதன் பின்னர் சுட்டிக்காட்டப்பட்ட திருத்தங்களுக்கமைய, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் மீள தயாரிக்கப்பட்டு வருகின்றது.

(ஆ) மீளாய்வு வருடத்தில் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து ரூபா 51,719,745 பங்களிப்பு நிதி கிடைத்திருந்ததுடன், அதில் ரூபா 6,375,000 இழப்பீடாக செலுத்தப்பட்டிருந்த அத்தொகை கிடைத்த பங்களிப்புத்தொகையிலிருந்து நூற்று 13 ஆக இருந்தது. இலங்கைக்குள் ஏற்படுகின்ற வாகன விபத்துகள் தொடர்பில் கருதும்போது இழப்பீட்டுத் தொகை பெற்றுக் கொள்வது குறித்து பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு இல்லாமையே இதற்கான பிரதான காரணமாக அமைந்திருப்பதை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டுள்ளது.

இனந்தெரியாத வாகனங்களால் ஏற்படும் விபத்துக்களுக்காக நிதி நிவாரணம் வழங்குவது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் முறையாக அதிகரிக்கப்பட்டு வருவதுடன், விபத்துத் தரவுகளை இலங்கை பொலிஸாருக்கு அறிக்கையிடப்படுகின்ற அளவிலும் பார்க்க வீதி பாதுகாப்பு தொடர்பாக தேசிய சபைக்கு முன்வைக்கும் போக்கு காணப்படுகின்றது. இழப்பீட்டு விண்ணப்பங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

வருடம்	**கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை**	**அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை**	**செலுத்திய வருடாந்த இழப்பீட்டுத்தொகை**	**முன்னைய வருடத்துக்கு நிகராக விண்ணப்பங்கள் அதிகரித்தல்.**
2020	30	34	4,275,000.00	-
2021	61	64	9,375,000.00	103.3%
2022 செப்தெம்ம்பர்	75	57	10,450,000.00	22%

2022 செப்தெம்ம்பர் மாதத்திற்குப்ப பின்னர், நிதி நிவாரணங்களை வழங்குவதற்கானக அங்கீகரிக்கப்பட்ட 17 விண்ணப்பங்களுக்காக ரூபா.3,650,000.00 ஆன தொகையினைச் செலுத்துவதற்கு நடவடிக்கையெடுத்துள்ளது.

(இ) 2017 ஒகஸ்ட் 14 ஆம் திகதிய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் என்பி/5பி/5டீஜி/17 இலக்கம் கொண்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிலைப்பாட்டு அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்தது.

வீதி பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் மூலம் நிலைப்பாட்டு அபிவிருத்தி இலக்குகளினுடாக வீதி பாதுகாப்புடன் தொடர்புடைய 03 நோக்கங்கள் கண்டறியப்பட்டிருப்பதுடன், அந்த இலக்குகளை அடையும் வகையில் வீதி பாதுகாப்பு குறித்த தேசிய சபையின் செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஈ) வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை வலுப்படுத்துவதற்காக போதியளவு பயிற்சி பெற்ற பதவியணி மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டியிருப்பினும், சபையின் செயல்பாடுகள் போக்குவரத்து அமைச்சு, இலங்கை புகையிரத திணைக்களம் மற்றும் இலங்கை போக்குவரத்து சபைக்கு இணைக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் அலுவலர் ஒருவர் மற்றும் அமய தொழிலாளர்களைக் கொண்டு இடம்பெறுகின்றது.

பதவியணியினரை அங்கீகரித்துக்கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு வேண்டிய அறிக்கைகளைத் தயாரிப்பது குறித்து 2022.09.06 ஆம் திகதி போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளருடன் (நிர்வாகம்) கலந்துரையாடலொன்று இடம்பெற்றதுடன், அங்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு அனுப்பப்பட உள்ளன.

அவ்வாறு தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சிற்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதுடன், மேலும் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை போக்குவரத்து இராஜாங்க அமைச்சின் கீழ் செயல்படுவதால், அது தொடர்பான அறிக்கைகள் போக்குவரத்து இராஜாங்க அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

(உ) 2018 திசெம்பர் மாதம் ஜப்பான் நன்கொடையாக கிடைத்திருந்த மற்றும் கொள்வனவு செய்திருந்த ரூபா 5,875,351 பெறுமதியான சாரதி பயிற்சி உபகரணங்களிலிருந்து சாரதி பயிற்சியளிப்புகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் , 2019 ஜூன் 21 ஆந் திகதியின் பின்னர் பயிற்சியளிப்பு நடவடிக்கைகள் நிறுத்திவைத்ததன் காரணமாக அந்த உபகரணங்கள் செயல்படாமல் இருந்தன.

இலங்கை போக்குவரத்து சபையின் வேண்டுகோளுக்கிணங்க வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் அனுமதியுடன் 2022.06.21 ஆம் திகதியிற்கு 3.8 மில்லியன் தேறிய பெறுமதியான உபகரண தொகுதி பயனுறுதி வாய்ந்த முறையில் பயன்படுத்துவதற்காக இலங்கை போக்குவரத்து சபையின் சாரதிப் பயிற்சி பாடசாலைகளுக்கு 2022.06.22 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த உபகரணங்கள் திறம்பட பயன்படுத்தப்படுகின்றனவா? என்பது குறித்து பின்தொடர் அறிக்கையொன்றினைப் பெறுவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

ஆர். ஏல். எண்டன் டி. மென்ஸ்,

தவிசாளர்,

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை.